# தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கம்
THE TAMILNADU HOTELS ASSOCIATION
Regd No. 46/1945-46

80 Years of serving People

President
M. Venkadasubbu B.Sc., B.L.
Darling Residency
11/8, Anna Salai, Vellore - 632 001
Phone : 0416 - 4202006 Cell : 98940 82901
Email : venkadasubbu@hotmail.com

Secretary
R. Srinivasan
Vasan Tiffan Home
198-B, Palace Road, Madurai - 625 001
Cell : 94430 63020 / 63800 98696
Email : jeyamvasan@gmail.com

Treasurer
P.G.R. Ganeshan
Hotel Rathna Bhavan
Opp. T. Nagar Bus Stand
Chennai - 600 017
Cell : 98409 94831


05-04-2023

## செயற்குழுக் கூட்டம் : 14-03-2023, கொடைக்கானல்
## நடவடிக்கைக் குறிப்பு

தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 14-03-2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு கொடைக்கானல் Green Lake View Resorts அரங்கில் திரு. M.வெங்கடசுப்பு தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி துவங்கியது.

**நீத்தார் நினைவஞ்சலி :**

கொடைக்கானல் ஹோட்டல் & ரிசார்ட் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. S. அப்துல்கனி ராஜா அவர்களின் தாயார் திருமதி. S. ரோஷனா 29-11-2022 தேதியன்று இறையடி எய்தினார்.

மதுரை சரவணா ரெஸ்டாரண்ட் உரிமையாளர் திரு. நவநீத கிருஷ்ணன் 17-01-2023 தேதியன்று இயற்கை எய்தினார்.

திருவண்ணாமலை நகர ஓட்டல்கள் சங்கத்தின் தலைவர் திரு. ரங்கநாதன் அவர்களின் தாயார் திருமதி. வசந்தா 18-02-2023 இறையடி எய்தினார்.

புதுக்கோட்டை ஆர்த்தி ஓட்டல் உரிமையாளர் திரு. N. குமர குரு அவர்களின் தந்தை திரு. நவநீதகிருஷ்ணன் ரெட்டியார் 21-02-2023 தேதியன்று இறைவனடி சேர்ந்தார்.

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் ஆனந்த பவன் ஓட்டல் உரிமையாளர் திரு. S. குகன் 05-03-2023 தேதியன்று இயற்கை எய்தினார்.

மயிலாடுதுறை தட்டி மெஸ் உரிமையாளர் திரு. K.K.சுப்ரமனியன் 05-03-2023 தேதியன்று இறையடி எய்தினார்.

நம்மை விட்டுப் பிரிந்து சென்ற உணவுக் குடும்ப உறவுகளின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறுதல் பெற வேண்டி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



Scanned with CamScanner

## வரவேற்புரைகள் :

திண்டுக்கல் மாவட்ட ஓட்டல்கள் சங்கத்தின் தலைவர் திரு. C. ராஜ்குமார், உப தலைவர் திரு. G. வெங்கடாசலம், கொடைக்கானல், ஓட்டல் & ரிசார்ட் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. S. அப்துல் கனி ராஜா, மற்றும் T.N.H.A. துணைத் தலைவர் திரு. K.L. குமார் ஆகியோர் வரவேற்புரைகள் அளித்தனர்.

## முந்தைய கூட்டம் :

08-11-2022 செவ்வாய்க்கிழமையன்று சென்னை லீ ராயல் மெரிடியன் ஓட்டல் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கத்தின் 77வது ஆண்டு விழா செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகளை அவை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

மேற்சொன்ன நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தித் தந்த சென்னை ஓட்டல்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் திரு. M. பரந்தாமன் மற்றும் உறுப்பினர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## தலைவர் துவக்க உரை :

T.N.H.A. தலைவர் திரு. M. வெங்கடசுப்பு அவர்கள் தனது துவக்க உரையில், செயற்குழுக் கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிகச்சிறப்பாகச் செய்துள்ள விழாக் குழுவினரைப் பாராட்டி, நன்றி தெரிவித்தார்.

## சுழற்சங்க ஆளுனருக்குப் பாராட்டு :

திண்டுக்கல் மாவட்ட ஓட்டல்கள் சங்கத்தின் தலைவர் திரு. C. ராஜ்குமார் அவர்களின் இல்லத்தரசி திருமதி ஆனந்த ஜோதி அனைத்துலக ரோட்டரி இயக்கம், மாவட்டம் 3000 ஆளுனராகத் தேர்வு செய்யப்பட்டு, எதிர்வரும் ஜூன் மாதத்தில் பொறுப்பேற்கவுள்ளார். ரோட்டரி மாவட்டத்தின் முதல் பெண் ஆளுநர் திருமதி ஆனந்த ஜோதி அவர்கள் தான். அனைத்துலக சேவை இயக்கத்தில் நம் உணவுக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் ஆளுநராகப் பொறுப்பேற்பது நம் உணவுக் குடும்ப உறவுகள் அனைவருக்குமே அளிக்கப்பட்ட பெரும் கௌரவமாக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ரோட்டரி மாவட்ட ஆளுநர் திருமதி. ஆனந்த ஜோதி மற்றும் திரு. C.ராஜ்குமார் ஆகியோர் அவையினர் அனைவரின் பலத்த கரவொலியுடன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

## உறுப்பினர்களின் கருத்துரைகள் :

தேனி மாவட்ட ஓட்டல்கள் சங்கத்தின் பொருளாளர் திரு. R. சுப்ரமணியன், புதுக்கோட்டை மாவட்ட சங்கத்தின் செயலாளர் திரு. K.G. ராஜா ஆகியோரின் கருத்துரைகளில், சட்டங்கள் ரீதியிலான பிரச்னைகளுக்கு மாநிலச் செயலாளர் விளக்கமளித்தார்.



Scanned with CamScanner

திருவாரூர் மாவட்ட சங்க நிர்வாக அமைப்பு குறித்து, திருத்துறைப்பூண்டி திரு. மோகன் கவலை தெரிவித்தார். துணைத் தலைவர் திரு. P.N. குப்புசாமி அவர்கள் திருவாரூர் சென்று உறுப்பினர்கள் அனைவரையும் சந்தித்து, ஆவன செய்வதாக ஏற்றுக் கொண்டார்.

மாநிலச் செயலாளர் திரு. R. ஸ்ரீனிவாசன் அவர்களின் 90வது பிறந்த நாள் Cake Cutting, பாராட்டுக்கள் மற்றும் கோபிச்செட்டிபாளையம் தாலுகா ஓட்டல்கள் சங்கத்தின் பிறந்தநாள் பரிசு ஆகியவைகளுடன் கொண்டாடப்பட்டது.

## வாழ்த்துரைகள் :

மாநில சங்கத்தின் துணைத் தலைவர்கள் திரு. T. ராமசுப்பு மற்றும் திரு. P.N. குப்புசாமி, இணைச் செயலாளர்கள் திரு. C.M. காமராஜ், திரு. R. முத்துக்குமார், திரு. G.S. வேலுமணி, திரு. கண்ணன், திரு. சண்முக பழநியப்பன் மற்றும் திரு. A. மணிகண்டன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர்.

## தீர்மானங்கள் :

1. கொடைக்கானல் நகருக்கான, 1993–ம் ஆண்டு “ மாஸ்டர் பிளான் ” மற்றும் 2019–ம் ஆண்டு “ மாஸ்டர் பிளான் ” இரண்டிலுமே பல குறைபாடுகள் உள்ளன. விளைவாக, கடந்த 30 ஆண்டுகளாக வணிக ரீதியிலான கட்டிடங்கள் எதற்குமே அனுமதி பெற இயலாத சூழ்நிலை உள்ளது. வணிகரீதியில் நகராட்சி அமைப்பின் உரிய அனுமதிகளுடன் கட்டப்பட்ட 300க்கும் மேற்பட்ட ஓட்டல்கள் பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்னை தொடர்பான முழு விபரங்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நன்கறிவார்கள். ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டம் ஒன்றினைப் பிறப்பித்து, 300க்கும் மேற்பட்ட ஓட்டல்களை மீண்டும் திறப்பதற்கு வழிவகை செய்யுமாறு தமிழக அரசை வேண்டுகிறோம்.

2. மக்கும் தன்மை கொண்ட திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்யும் பணியில் அறிவியல் ரீதியிலான பெரும் மாறுதல்கள் மற்றும் இயந்திரங்கள் உருவாகியுள்ளன. கழிவுகள் செல்வமாகின்றது 2016–ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை விதிகளில் அறிவியல் முன்னேற்றங்களுக்கேற்ப, விதி எண் 4 உபவிதி (8) உள்ளிட்ட பல விதிகளைத் திருத்த வேண்டும். மக்கும் தன்மை கொண்ட கழிவுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, சேகரித்து நவீன இயந்திரங்கள் மூலம் மறு சுழற்சி செய்வதன் வாயிலாக, இயற்கை எரிவாயு மற்றும் கம்போஸ்ட் உரம் தயாரிக்க வேண்டும். கழிவுகள் செல்வமாகும், பல லட்சம் கோடி டாலர் அன்னியச் செலாவணி சேமிக்க இயலும். மத்திய அரசும், மாநில அரசும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கோருகிறோம்.

3. சேவை வழங்கும் தொழிலாக அறியப்படும் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் M.S.M.E. சட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் சேவை சார்ந்த தொழில்களும் பெறத் தகுதி பெற்றுள்ளன.



Scanned with CamScanner

ஓட்டல்கள் மற்றும் உணவகங்களின் மின் தூய்ப்பு வகையை வணிக ரீதியிலான வரைமுறையிலிருந்து தொழிற்சாலைகளுக்கான மின் தூய்ப்பு வகையாக மாற்றவேண்டுமென தமிழக அரசை வேண்டுகிறோம்.

4. இந்திய அரசியலமைப்புச் சட்டம் விதி எண் 21, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை, நடமாடும் உரிமை, தொழில், வணிகம் போன்றவைகளை எவ்வித இடையூறுமின்றிச் செய்வதற்கான உரிமை ஆகியவைகளை இந்தச் சட்டப் பிரிவு வழங்குகின்றது. அரசியல் இயக்கங்கள், மற்றும் பல்வேறு ஆர்வலர் இயக்கங்கள் 'பந்த்' என்ற பெயரில் இவ்வுரிமைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடக்கூடாது என உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. 'பந்த்' போன்ற அரசியலமைப்புச் சட்டம் விதி எண் 21க்கு முரண்பாடான நடவடிக்கைகளை, முற்றிலுமாகத் தடை செய்து உரிய அரசு ஆணை பிறப்பிக்குமாறு தமிழக அரசை வேண்டுகிறோம்.

5. சுற்றுலா வளர்ச்சிக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் பல லட்சம் கோடியில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. கொடைக்கானல் நகரம் அகில இந்திய அளவிலும், உலக அளவிலும், நன்கறியப்பட்ட சுற்றுலா நகரம். 10,000க்கும் மேற்பட்ட குடியிருப்பு இல்லங்கள் உள்ளன. பலநூறு உணவகங்கள், தங்கும் விடுதிகள் போன்றவை சுற்றுலா வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றன. ஆனால், கொடைக்கானல் நகரம், மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாக்கத் தேவையான புதைசாக்கடை வசதி இந்த நகரில் இல்லை. 1999–ம் ஆண்டில் 40 ஓட்டல்கள் மற்றும் இரு பள்ளிகள் இணைந்து உருவாக்கிய புதை சாக்கடை அமைப்பு மட்டுமே இன்றுவரை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கொடைக்கானல் நகரில் சீர்மிகு நகரத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, புதைசாக்கடை வசதியை உருவாக்க, உரிய அரசாணை பிறப்பிக்குமாறு தமிழக அரசை வேண்டுகிறோம்.

6. உணவகங்களில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்யமான உணவு வகைகளை வழங்குவதற்கு உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தில் பல சிறப்பான வழிமுறைகளும், விதிகளும் உள்ளன. ஆனால், அந்தச் சட்டத்தில் உள்ள தண்டனை விதிகளை மட்டும் தவறாகப் பயன்படுத்தி, சமூக விரோதிகளும், விஷமிகளும்; உணவக உரிமையாளர்களைப் பயமுறுத்திப் பணம் பறிக்க முயல்கின்றனர். அத்தகையோரை அடையாளம் கண்டு, குண்டர் சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் எனத் தமிழக அரசை வேண்டுகிறோம்.

மேற்கண்ட ஆறு தீர்மானங்களும் அவையினரால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



Scanned with CamScanner

**தலைமை உரை:** திரு. M. வெங்கடசுப்பு

" செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுமார் 800 பேர் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர் என்பதே நமக்கெல்லாம் உற்சாகமூட்டும் சாதனை. திண்டுக்கல் மாவட்ட சங்கம் மற்றும் கொடைக்கானல் நகர சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் விடுத்த அழைப்பை நம் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிகிறோம். 14-ம் தேதி காலையிலிருந்தே கொடைக்கானல் நகரம் முழுவதிலும் நம் உறுப்பினர்களைக் காண்பது நமக்கெல்லாம் பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. விழாக் குழுவினருக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

**மனமுவந்து பாராட்டி நன்றி கூறுகிறோம். நன்றி! நன்றி!!**

மாநில செயற்குழுக் கூட்டத்தை நடத்தும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட தினத்தன்றே, திண்டுக்கல் மாவட்ட சங்கத்தின் தலைவர் திரு. C. ராஜ்குமார், துணைத் தலைவர் திரு. G. வெங்கடாசலம், செயலாளர் திரு. M. வெங்கடேஷ் மற்றும் பொருளாளர் திரு. R. ரமேஷ், கொடைக்கானல் நகர சங்கத்தின் தலைவர் திரு. S. அப்துல் கனி ராஜா, செயலாளர் திரு. M.N. சலாமத் மற்றும் பொருளாளர் திரு. S. சுகுமார் ஆகியோர் மிகுந்த உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபட்டனர். திண்டுக்கல் மற்றும் கொடைக்கானலில் பல ஆலோசனைக் கூட்டங்கள்.

விழாக் குழுவின் தலைவராக ஈடன் கார்டன் திரு. கென்னடி பொறுப்பேற்றுக் கொண்ட தருணத்திலிருந்தே விழாவின் வெற்றி உறுதி செய்யப்பட்டது எனலாம். 400 உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்ற முதல் எஸ்டிமேட் 600 பின்னர் 800 என வளர்ந்து கொண்டே சென்றாலும், நண்பர் கென்னடி சிறிதும் தயக்கமின்றி, தனது செயல் திட்டங்களை விரிவாக்கிக் கொண்டே இருந்தார். கொடைக்கானல் நகரத்தைச் சார்ந்த நம் உணவுக் குடும்ப உறவுகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் 600 அறைகளைக் கட்டணமின்றி அளிக்க முன்வந்தது போற்றுதலுக்குரியது.

**உணவு:**

விழா எதுவாயினும், வெற்றிக்குப் பெரும் பங்காற்றுவது உணவு. இரவு சிறப்பு விருந்து அளிக்கும் வாய்ப்பினைத் தனக்கே அளிக்க வேண்டுமெனக் கேட்டுப் பெற்றுக் கொண்டார் அருமை நண்பர் அபூர்வா திரு. குணசீலன். 400 to 600 to 800 என விருந்தினர் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே சென்றாலும், நண்பர் குணசீலன் அவர்களின் ஆர்வமும், ஈடுபாடும் தளரவில்லை. 5 STAR உணவு அளித்தார். விருந்து நிகழ்வுகள் நிறைவடையும் தருணம் வரை அவர் முகத்தில் தொடர் புன்முறுவல் கண்டோம். உணவு வழங்கும் பணி முழுவதும் Sponsored by அபூர்வா மற்றும் நல்லம்மாள் கிராமிய விருந்து உணவகங்கள்.



Scanned with CamScanner

## விழா வளாகம் :

Green Lake View Resorts, Managing Director திரு. A.M.A. காதர் பாட்சா நம் மனப்பூர்வமான பாராட்டுக்களுக்கும் நன்றிக்கும் உரியவர். விழா அரங்கம், அறைகள் அனைத்தையும் கட்டணம் ஏதுமின்றி நமக்கு அளித்தார். அதுமட்டுமின்றி நம் உறுப்பினர்கள் அனைவருக்கும் 14–ம் தேதி காலை மற்றும் மதிய உணவையும் அளிப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என வற்புறுத்தி ஏற்றுக் கொண்டார்.

## தங்கும் வசதிகள் :

சிறப்பான ஏற்பாடுகள். பெரும்பாலும், அனைவருக்கும் 'ஸ்டார்' வசதி அறைகள் அளிக்கப்பட்டன. நண்பர்கள் திரு. காளிதாஸ், கொடைக்கானல் சங்கத்தின் மேலாளர் திரு. சுரேஷ் மற்றும் சுவாமிநாதன் ஆகியோர் கொடைக்கானல் நகரத்தின் நுழைவு வாயிலிலேயே வரவேற்பு அலுவலகம் அமைத்து, அறைகள் ஒதுக்கீடு அட்டைகளை வழங்கினர். நம் உணவுக் குடும்ப உறவுகள் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றனர்.

## Event Sponsor and Organiser :

குணா கிச்சன் எக்யூப்மெண்ட்ஸ் பாபுஜி அவர்களுக்கு நம்முடைய மனப்பூர்வமான நன்றி. மேடை அமைப்பு, வரவேற்பு பதாகைகள், நிகழ்ச்சி தொகுப்பு, கொடைக்கானல் குளிரை நம் உறுப்பினர்கள் உற்சாகத்துடன் வெல்வதற்கான ஏற்பாடுகள், வாண வேடிக்கைகள், கலை நிகழ்ச்சிகள் என அனைத்துமே "A ONE". குணா கிச்சன் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனம் மென்மேலும் பெரும் வளர்ச்சி பெற நம் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

## நன்றியுரை :

திண்டுக்கல் மாவட்ட ஓட்டல்கள் சங்கத்தின் செயலாளர் திரு. வெங்கடேஷ் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

நன்றி, வணக்கம்.

தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கத்திற்காக

R. ஸ்ரீனிவாசன்
செயலாளர்

பெறுநர் :

தமிழ்நாடு ஓட்டல்கள் சங்கத்தின்
நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்,
கௌரவ ஆலோசகர்கள் மற்றும்
சிறப்பு அழைப்பாளர்கள்



Scanned with CamScanner